**ஏப்ரல் – 05**

# TNPSC துளிகள்

- கோயம்புத்தூரில் உள்ள கீரநத்தம் கிராமப் பஞ்சாயத்துப் பொதுமக்களை நெகிழிப் பொருட்களை கொண்டு வந்து ஒப்படைத்து ஒரு கிலோவிற்கு 10 ரூபாய் என்ற வீதத்தில் சன்மானத்தினைப் பெற ஊக்குவித்துள்ளது.
- மகிழ்ச்சி குறித்த ஆய்வுகளை கல்விப் பாடத்திட்டத்தில் ஒருங்கிணைப்பதைப் பெரும் நோக்கமாகக் கொண்டு, மெட்ராஸ் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, மகிழ்ச்சி அறிவியலுக்கான ரேகி சிறப்பு மையத்தினை நிறுவியுள்ளது.
- சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் (CMRL) நிறுவனத்தின் இரண்டாம் கட்ட வலை அமைப்பிற்கான செயல்பாடு மற்றும் பராமரிப்பு ஒப்பந்தத்தினை டெல்லி மெட்ரோ இரயில் கழகம் (DMRC) பெற்றுள்ளது.
- வாரீ எனர்ஜிஸ் லிமிடெட் நிறுவனமானது, குஜராத்தில் உள்ள சிக்லியில் 5.4 ஜிகாவாட் (GW) திறன் கொண்ட இந்தியாவின் மிகப்பெரியதான ஒரு சூரிய மின்கல உற்பத்தி மையத்தினைத் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- குஜராத் மாநில முதல்வர் குஜராத்தின் டாஹேஜ் பகுதியில் குஜராத் ஆல்கலீஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட் (GACL) என்ற நிறுவனத்தினால் நிறுவப்பட்ட இந்தியாவின் மிகப் பெரிய குளோரோடோலூயீன் ஆலையை திறந்து வைத்துள்ளார்.
- மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் ஆனது, பல்வேறு கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தில் இந்தியாவின் முதல் நுண் மின்னணுவியல் கண்காட்சியை மிகவும் வெற்றிகரமாக நடத்தியது.
- கடற்படை துணை அதிகாரி K. தில்னா மற்றும் A. ரூபா ஆகிய பெண் அதிகாரிகளைக் கொண்ட இந்தியக் கடற்படை பாய்மரக் கப்பல் (INSV) தாரிணி, நவிகா சாகர் பரிக்ரமா II என்ற உலகளாவியச் சுற்றுப்பாதைப் பயணத்தின் தனது நான்காவது மற்றும் இறுதி நிறுத்தமாக தென்னாப்பிரிக்காவின் கேப் டவுன் நகரை வந்தடைந்தது.
- கானா நாட்டைச் சேர்ந்த ஷெர்லி போட்ச்வே காமன்வெல்த் நாடுகளின் 7வது பொதுச் செயலாளராகப் பதவியேற்று இந்தப் பதவியை வகிக்கும் முதலாவது ஆப்பிரிக்கப் பெண்மணி என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## கச்சத்தீவு குறித்த தீர்மானம் 2025

- கச்சத்தீவை மீட்டெடுக்க வேண்டி மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்நாடு சட்டசபை ஒருமனதாக ஒரு தீர்மானத்தினை நிறைவேற்றி உள்ளது.
- இந்தத் தீர்மானமானது 1974 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை உடனடியாக மறுபரிசீலனை செய்து கச்சத்தீவை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தியது.
- 1974 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 ஆம் தேதியன்று, கச்சத்தீவு தொடர்பான மத்திய அரசின் முடிவுக்கு வருத்தம் தெரிவிக்கும் தீர்மானத்தினை தமிழக சட்டமன்றம் அப்போது நிறைவேற்றியது என்பதோடு இலங்கையுடனான அந்த ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்யுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியது.

- முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் ஆட்சிக் காலத்தில், கச்சத்தீவை மீட்க மத்திய அரசை வலியுறுத்தி 1991 ஆம் ஆண்டு அக்டோபர் 03 மற்றும் 2013 ஆம் ஆண்டு மே 03 ஆகிய தேதிகளில் சட்டமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
- O. பன்னீர்செல்வம் முதல்வராக இருந்த போது, 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 05 ஆம் தேதி அன்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.
- கச்சத்தீவு என்பது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பாக் நீர்ச் சந்தியில் 285 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மக்கள் வசிக்காத தீவாகும்.
- 17 ஆம் நூற்றாண்டில் மதுரை நாயக்கர் வம்சத்தின் கீழ், இராமநாதபுரம் ஜமீன்தார் மக்களின் கட்டுப்பாட்டில் இது இருந்தது.
- 1974 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை கடல்சார் ஒப்பந்தத்தின் கீழ், இந்தத் தீவு உடனே இலங்கைக்கு மாற்றப்பட்டது.




# தேசியச் செய்திகள்

## இந்தியா சீனா இடையிலான அரசுமுறை உறவுகளின் 75வது ஆண்டு நிறைவு 2025



- இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளிடையேயான இருதரப்பு அரசுமுறை உறவுகள் நிறுவப்பட்ட 75வது ஆண்டு நிறைவு கொண்டாடப் பட்டது.

- இருதரப்பு உறவுகள் ஆனது, இரு நாடுகளின் முத்திரைச் சின்ன விலங்குகளின் நடன உருவமான 'டிராகன்-யானை டேங்கோ' வடிவத்தினை மேற்கொள்ள வேண்டும் என சீன அதிபர் கூறியுள்ளார்.
- 1950 ஆம் ஆண்டில் இரு நாடுகளும் அரசுமுறை உறவுகளை நிறுவின என்ற நிலையில் மேலும் 1954 ஆம் ஆண்டில் பஞ்ச சீல ஒப்பந்தம் கையெழுத்தானது.

## பாரம்பரியப் பொருட்களைத் திருப்பி அனுப்புவதற்கான நிதி


- நாட்டிலிருந்து திருடப்பட்டு கடத்தப்பட்ட பழங்காலப் பொருட்களை மீண்டும் திருப்பி அனுப்புவதற்கான முயற்சிகளை ஆதரிக்க பொது-தனியார் கூட்டாண்மைகளை மேற் கொள்வதற்கு பாராளுமன்றக் குழு பரிந்துரைத்துள்ளது.
- தனியார் நபர்களிடமிருந்துப் பெரும் பங்களிப்புகளை ஏற்கும் வகையில் 'பாரம்பரியப் பொருட்களைத் திருப்பி அனுப்புவதற்கான நிதியை' நிறுவுமாறு அது அரசாங்கத்திடம் கோரியுள்ளது.
- இந்த நிதியானது, சட்டரீதியிலான சவால்களை ஆதரிக்கவும், கொள்முதல்கள் குறித்த பேச்சுவார்த்தைகளை நடத்தவும், திரும்பப் பெறப்பட்ட கலைப் பொருட்களின் இட மாற்றம் மற்றும் பாதுகாப்பிற்கு நிதியளிக்கவும் பயன்படுத்தப்படும்.





## இந்தியாவின் எரிசக்தி புள்ளிவிவரங்கள் 2025

- இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி திறன் ஆனது, 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி, 2,109,655 மெகாவாட் திறனை எட்டியுள்ளது.
- அதிகபட்ச உற்பத்தித் திறன் காற்றாலையிலிருந்து பெறப்படுகிறது என்ற நிலையில் இது 1,163,856 மெகாவாட் (55.17%) ஆகும்.
- அதைத் தொடர்ந்து சுமார் 748,990 மெகாவாட் (35.50%) சூரிய மின்னாற்றலும், 133,410 மெகாவாட் (6.32%) மாபெரும் நீர் மின்னாற்றலும் உள்ளன.
- புதுப்பிக்கத்தக்க வளங்களிலிருந்து இந்தியாவின் மொத்த மின்சார உற்பத்தியானது, 2014-2015 ஆம் நிதியாண்டில் இருந்த 205,608 ஜிகாவாட்-மணிநேர (GWh) என்ற திறனில் இருந்து, 2023-2024 ஆம் நிதியாண்டில் 370,320 GWh ஆக உயர்ந்துள்ளது.
- இது 10 ஆண்டுகளில் 6.76% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தைக் குறிக்கிறது.

- 2023-2024 ஆம் நிதியாண்டில், நிலக்கரி இறக்குமதியானது சுமார் 11.2% அதிகரித்து 262.99 மில்லியன் டன்களை எட்டியது.
- இயற்கை எரிவாயு இறக்குமதியானது சுமார் 21% அதிகரித்து 31.8 பில்லியன் கன மீட்டராக உயர்ந்தது.




## FPV காமிகேஸ் பீரங்கி எதிர்ப்பு ஆளில்லா விமானம்





- அதன் முதல் வகையான முயற்சியில், இந்திய இராணுவம் ஆனது பீரங்கி டாங்க் எதிர்ப்பு ஆயுதம் பொருத்தப்பட்ட ஒளிப்படக் கருவியின் தகவல் மூலமான ஒரு முக்கிய கட்டுப்பாட்டினை மேற்கொள்ளும் (FPV) காமிகேஸ் என்ற ஆளில்லா விமானத்தினை அறிமுகப் படுத்தத் தொடங்கியுள்ளது.
- போர்க்கள இயக்கவியலைப் பரிமாற்றும் ஒரு திறனை வெளிப்படுத்திய உக்ரைனில் நடைபெற்ற போரின் போது FPV ஆளில்லா விமானங்கள் முக்கியத்துவம் பெற்றன.
- 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டமானது, சண்டிகரில் உள்ள டெர்மினல் பாலிஸ்டிக்ஸ் (உந்துவிசையின் துணைப்புலம்) என்ற ஒரு ஆராய்ச்சி ஆய்வகத்துடன் (TBRL) இணைந்து உருவாக்கப்பட்டது.
- தற்கொலைப் பாங்கான தாக்குதலில் ஈடுபடும் ஆயுதம் என்றும் அழைக்கப்படுகின்ற

காமிகேஸ் ஆளில்லா விமானங்கள் துல்லியமான எறிகணைகள் மற்றும் ஆளில்லா வான்வழி அமைப்புகளைப் போன்றவையாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் பாதுகாப்பு தளவாட ஏற்றுமதிகள் 2024/25




- 2024-25 ஆம் நிதியாண்டில், நாட்டின் பாதுகாப்புத் துறை ஏற்றுமதி ஆனது, 23,622 கோடி ரூபாயாக (தோராயமாக 2.76 பில்லியன்) உயர்ந்துள்ளது.
- இது சமீபத்தில் முடிவடைந்த நிதியாண்டில் சுமார் 2,539 கோடி ரூபாய் அல்லது 12.04% உயர்வைக் குறிக்கிறது.
- 2024-25 ஆம் நிதியாண்டில் பாதுகாப்பு ஏற்றுமதிக்கு தனியார் துறை மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் முறையே 15,233 கோடி ரூபாய் மற்றும் 8,389 கோடி ரூபாய் பங்களித்துள்ளன.
- அதே காலக் கட்டத்தில் மொத்த ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கையும் சுமார் 17.4% அதிகரித்துள்ளது.

## இந்தியாவின் பருத்தி உற்பத்தி 2024/25

- குஜராத் மற்றும் வடக்குப் பகுதியில் மிக குறைவான மகசூல் காரணமாக, அக்டோபர் மாதம் தொடங்கும் நடப்பு பருவத்தில் (2024-25) ஒட்டுமொத்த பருத்தி உற்பத்தி 301.75 லட்சம் பேல்களாகக் குறையும் என்று மதிப்பிடப் பட்டுள்ளதாக இந்தியாவின் பருத்தி சங்கம் தெரிவித்துள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டின் முந்தைய பருவத்தில், பருத்தி உற்பத்தியானது சுமார் 327.45 லட்சம் பேல்களாக இருந்தது.
- இந்த மதிப்பீடுகள் குஜராத், பஞ்சாப் மற்றும் ஹரியானாவில் பதிவான குறைவானப் பருத்தி மகசூல் பதிவுகளை அடிப்படையாகக் கொண்டவை.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் இறுதி வரையில் பதிவான மொத்தப் பருத்தி விநியோகம் 234.26 லட்சம் பேல்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

- 2024-25 ஆம் ஆண்டு பயிர்ப் பருவத்திற்கான ஏற்றுமதிகள் ஆனது, 17 லட்சம் பேல்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது என்பதோடு இது 2023-24 ஆம் பயிர்ப் பருவத்திற்கு சுமார் 28.36 லட்சம் பேல்களாக மதிப்பிடப் பட்டது.

**STATE-WISE BREAK-UP**

| Year | Punjab | Haryana |
|---|---|---|
| 2019-20 | 9.5 | 26.5 |
| 2020-21 | 10.23 | 18.23 |
| 2021-22 | 6.46 | 13.16 |
| 2022-23 | 4.44 | 10.01 |
| 2023-24 | 6.29 | 15.09 |
| 2024-25* | 2.72 | 12.44 |



Prodn in lakh bales (1 bale is equal to 170 kg) * Till March 24, 2025

## 2024 ஆம் ஆண்டில் இந்தியாவின் வெளிநாட்டுக் கடன்




- 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 648.7 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்த இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் ஆனது 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் 10.7 சதவீதம் அதிகரித்து 717.9 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 19 சதவீதமாக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளிநாட்டுக் கடன் விகிதம் ஆனது 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாத


இறுதியில் 19.1 சதவீதமாக இருந்தது.

- அமெரிக்க டாலர் மதிப்பிலான கடன்கள் ஆனது, இந்தியாவின் வெளிநாட்டுக் கடனில் மிகப்பெரியப் பங்கினை கொண்டிருந்தது என்பதோடு இது 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் 54.8 சதவீத பங்கைக் கொண்டிருந்தது.
- அதைத் தொடர்ந்து இந்திய ரூபாய் (30.6 சதவீதம்), ஜப்பானிய யென் (6.1 சதவீதம்), SDR (4.7 சதவீதம்) மற்றும் யூரோ (3 சதவீதம்) ஆகியவை உள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சனிக் கிரகத்தில் 128 புதிய துணைக் கோள்கள்

- வானியலாளர்கள் சனிக் கிரகத்தைச் சுற்றி வரும் 128 புதிய அதிகாரப்பூர்வ துணைக் கோள்களைக் கண்டறிந்துள்ளனர்.
- இதன் மூலம் அதன் துணைக் கோள்களின் எண்ணிக்கை 274 ஆக உயர்ந்துள்ளதோடு மேலும் சூரிய மண்டலத்தில் உள்ள எந்த ஒரு கிரகத்தையும் விட இதன் துணைக் கோள்களின் எண்ணிக்கையானது அதிகபட்சமாகும்.
- சனிக் கோளானது, 95 என்று அறியப்பட்ட துணைக் கோள்களைக் கொண்ட வியாழந கிரகத்தினை விஞ்சியுள்ளது என்ற நிலையில் இந்த வரிசையில் யுரேனஸ் (28) மற்றும் நெப்டியூன் (16) மூன்றாவது மற்றும் நான்காவது இடத்தில் உள்ளன.





# முக்கிய தினங்கள்

## ஒடிசா மாநில தினம் - ஏப்ரல் 01

- 1936 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று, பிரிட்டிஷ் அரசாங்கம் ஆனது பீகார் மற்றும் ஒடிசா மாகாணத்திலிருந்து ஒடிசாவை அதிகாரப் பூர்வமாகப் பிரித்து, அதற்கு தன்னாட்சி நிர்வாக அந்தஸ்தை வழங்கியது.
- அப்போது பீகார் மற்றும் ஜார்க்கண்டுடன் சேர்ந்து ஒடிசா, வங்காள மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்தது.
- ஒடிசாவின் மொழியியல் மற்றும் பன்முகக் கலாச்சார அடையாளத்தைப் பெருமளவு

பாதுகாக்கும் விருப்பத்திலிருந்து தனி மாநிலத்திற்கான கோரிக்கை உருவானது.

- மதுசூதன் தாஸ், உத்கல்மணி கோப பந்து தாஸ் மற்றும் ஃபக்கீர் மோகன் சேனாபதி ஆகியோர் இந்த இயக்கத்தின் முக்கியத் தலைவர்களாக இருந்தனர்.




# இதரச் செய்திகள்

## மிடதால் மற்றும் திக்ரானா ஹரப்பா தளங்கள்




- ஹரியானா அரசாங்கம் ஆனது பிவானி மாவட்டத்தில் 4,400 ஆண்டுகளுக்கும் மேலான ஹரப்பா நாகரிகத்தின் இரண்டு முக்கியத் தளங்களைப் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் தளங்களாக அறிவித்துள்ளது.
- இந்த இரண்டுத் தளங்களும் திக்ரானா மற்றும் மிடதால் ஆகிய இரண்டு அண்டை கிராமங்களில் அமைந்துள்ளன.
- திக்ரானா என்ற பகுதியில், கி.மு. 2,400 ஆம் ஆண்டில் ஆரம்பத்தில் செம்புக் கற்கால வேளாண் சமூகங்கள் வசித்து வந்தன.
- சோதியர்கள் என்று பிரபலமாக அறியப்படும் இந்த ஆரம்பகாலக் குடியேறிகள் சாங்,

மிடதால், திக்ரானா போன்ற இடங்களில் ஓலை கூரைகளைக் கொண்ட சிறிய மண் செங்கல் வீடுகளில் வசித்து வந்தனர்.

- செம்பு, வெண்கலம் மற்றும் கல் கருவிகள் அதிக எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதால் அவர்கள் அவற்றை அதிகளவில் பயன்படுத்தினர் என அறியலாம்.

## மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் 50 ஆம் ஆண்டு நிறைவு

- உலகின் மிகவும் செல்வாக்கு மிக்க சில தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றான மைக்ரோசாப்ட் நிறுவனமானது, 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 04 ஆம் தேதியன்று அதன் 50 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.
- இது 1975 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் நியூ மெக்ஸிகோ நகரில் பில் கேட்ஸ் மற்றும் பால் ஆலன் ஆகியோரால் நிறுவப்பட்டது.
- விண்டோஸ் 1.0 என்பது 1985 ஆம் ஆண்டு மைக்ரோசாப்ட் விண்டோஸ் நிறுவனம் வெளியிட்ட முதல் பெரிய இயங்குதளம் ஆகும்.
- வேர்டு, பவர்பாயிண்ட் மற்றும் எக்செல் ஆகியவற்றைக் கொண்ட மைக்ரோசாப்ட் ஆபிஸ் 1989 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- மைக்ரோசாப்ட் வலை தள உலாவியான இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர், முதன்முதலில் 1995 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- விண்டோஸ் எக்ஸ்பி இயங்குதளம் 2001 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- அதன் விண்டோஸ் 7 ஆனது 2009 ஆம் ஆண்டில் மைக்ரோசாப்ட் நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டது.
- கூகுள் சர்ச் எனும் தேடுபொறியுடன் போட்டியிடும் விதமாக மைக்ரோசாப்ட் நிறுவனம் 2009 ஆம் ஆண்டில் பிங் எனும் தேடுபொறியை அறிமுகப் படுத்தியது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★